***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.56/2022 – P.W.3 (LW6)***

| | |
|---|---|
| *Name* | அம்பேத்கார் |
| *Father/Husband's Name* | வீரையன் |
| *Village* | ஆலாத்தூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *43* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 04.02.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் ஆலாத்தூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பக்கத்து ஊர்க்காரரர். இந்த வழக்கின் புகார்தாரர் ராகுல் என்பவரையும் தெரியும். இறந்துபோன முருகையனையும் தெரியும். முருகையனுக்கு விபத்து ஏற்பட்ட விவரம் எனக்கு கேள்விபட்ட வகையில் தெரியும். சம்பவ இடத்தில் நான் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும், கடந்த 12.09,,2019 ம் தேதியன்று காலை 10.30 மணிக்கு நான் எனது டாடா ஏசி வாகனத்தில் லோடு ஏற்ற விக்கிரபாண்டியம் வந்தபோது எனது வண்டி முன்னால் இறந்துபோன முருகையன் சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்தார் என்றும் ரவிச்சந்திரன் வீட்டிற்கு அருகில் எதிர்புறம் வந்து ஆஜர் எதிரி ரோட்டின் ஓரமாக சென்ற முருகையன் மீது மோதி

இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள் என்றும் காயம்பட்ட இருவரையும் தூக்கிவிட்டோம் என்றும் முருகையன் மீது மோதிய வாகனமான TN50-AX-5127 என்ற பதிவெண் கொண்ட வண்டியை ஓட்டி வந்தது ஆஜர் எதிரி தான் என்றும் சம்பவத்தை நேரிட்டு பார்த்தேன் என்றும் காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம் என்றும் பின்னிட்டு முருகையன் இறந்துவிட்டார் என்று கேள்விபட்டேன் என்றும் கூறியுள்ளேன் என்றால் - சரியல்ல.

2. தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.